விலைசதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ 2001, சித்திரை 19 உ சனி (2-5-70) ஸபர் பிறை 25 —புத்தகம் 24 இதழ் 26

## மட்டக்களப்பு காணிக் கந்தோர் தேர்தல் பிரசார மண்டபமா?

மட்டுநகர், மே 1

மட்டக்களப்புக் கச்சேரியில் உள்ள காணிக் கந்தோரில் அன்ருடம் தேர்தல் பிரசாரம் நடைபெற்று வருவதாகப் பேசிக்கொள்ளப் படுகிறது: அரசாங்க ஊழியர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடக்கூடாது என்பது தெரிந்ததே: ஆனல் மட்டக்களப்பு காணிக் கந்தோரில் உள்ள முக்கிய பொறுப்பாளர் ஒருவர் மிக மும்முரமாக அலுவலக வேளையிலும் பின்பும் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகிருராம். ஓயாது இந்த அலுவலகத்தில் அரசியல் பேசப்படுவது இங்கு தமது அலுவல்களைப் பார்க்கச் செல்லும் பொது மக்களுக்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது பற்றி மேலதிகாரிகளுக்கு முறையீடு செய்யும் பொருட்டு பொது மக்களிடையே கையொப்பங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிகிறது,

# வெறிபிடித்த யூ. என். பி. யானையை அடக்கிவைத்தது தமிழரசுக் கட்சி!

## நாம் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டவர்கள் யூ என். பி. தலைவர்கள்!

### புலோலியில் ஜெயக்கொடி முழக்கம்!

புலோலி, மே 1

''இனவெறிபிடித்து அலைந்து திரிந்த யூ. என். பி. யானையை 1965ம் ஆண்டு அடக்கிவைத்தது தமிழரசுக்கட்சியே 1965ம் ஆண்டு மார்ச் 24ந் திகதி இன்ன இடத்தில் கையெழுத்திடு என்று தமிழரசுக் கட்சியினர் சொல்ல மறுபேச்சின்றி அதே இடத்தில் கையெழுத்திட்டவர்கள் யூ. என். பி. தலைவர்கள். இந்த பலத்தை எமக்கு தந்தது தமிழ் மக்களாகிய நீங்களே! இம்முறையும் சகல இடங்களிலும் தமிழரசுப் பிரதிநிதிகளை தெரிவு செய்து மீண்டும் இப்பலத்தை எமக்கு தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு''.

—இவ்வாறு புலோலியில் நடைபெற்ற தமிழரசுப் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய திரு. க. ஜெயக்கொடி குறிப்பிட்டார். திரு. ஜெயக்கொடி மேலும் கூறியதாவது:—

''கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சிக்கு உடுப்பிட்டித் தொகுதியில் ஆதரவு இருந்தபோதிலும், சில சந்தர்ப்பங்களினல் வெல்ல முடியாமல் போயிற்று. இம்முறை கட்டாயமாக வெல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கிறது



என்பதை இங்கு கூடியிருக்கும் உங்களைப் பார்த்தவுடன் தெரிகிறது. அத்துடன் இன்று காலை நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தைப் பார்த்ததும் மாற்றுக் கட்சியினர் கதிகலங்கிவிட்டார்கள் என்று எமக்குப் பிந்திக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இனி தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு கொள்கை இலட்சியம் இருக்கின்றதா? எனப் பார்ப்போம். தென்னிலங்கையில் யூ. என். பி. என்ற கட்சி இருக்கிறது அக்கட்சிக் கொள்கைக்கும், காங்கிரஸ் கட்சிக் கொள்கைக்கும் ஒற்றுமையுண்டு. அது என்னவென்ருல் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சி போட்டியிடுகிற தொகுதிகளில்

(4ம் பக்கம் பார்க்க)

### வேட்பாளரும் வாக்காளனும்

அளவெட்டியில் (காங்கேசன் துறை)

கம்யூனிஸ்ட்வேட்பாளர்: எனது கட்சிக்கொள்கைக்காக வோட்டுப் போடாவிட்டாலும், எனது சேவைக்காக வோட்டுப்போடண்ணை.

தோட்டக்கார வாக்காளன்: ஏன் தம்பி, இப்படிப் பிரசாரஞ் செய்தாலென்ன?

வேட்பாளர்: எப்படி?

வாக்காளன்: மசாலே வடே நல்லெண்ணை எனக்குப் போடு வோட்டண்ணை.



## "பத்தாண்டுகளாக தமிழ்ப் பகுதியில் சிங்கள குடியேற்றம் நடைபெறவில்லை''

ஆர். ஜி. கூறுகிருர்!

திருமலை, மே 1

'தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்காக கடந்த பத்து ஆண்டுகளில் அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவுவதைக் கைவிட்டுள்ளன.

—இவ்வாறு திருகோணமலையில் தமது கட்சிக்கூட்டமொன்றில் உரையாற்றிய திரு. ஆர். ஜி. சேனநாயகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்:

கூட்டுக் கட்சியினர் கச்சேரிக்குப் பதிலாக மக்கள் மன்றங்களை அமைப்போம்

(4ம் பக்கம் பார்க்க)

## பிரிவினைச் சூழ்ச்சிகளுக்கு சிறிதும் இடந்தராதீர்!

### தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இராசதுரை வேண்டுகோள்!

பாண்டிருப்பு மே [illegible]

27-4-70ல் கல்முனை [illegible] தொகுதித் தமிழரசுக் கட்சி வேட்பாளர் டாக்டர். உதுமான் லெவ்வை அவர்களை ஆதரித்து நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய எழில் தமிழ் ஆளர் இராசதுரை கூறியதாவது:

வடக்கிலும் கிழக்கிலும் இருந்து அனுப்பப் படுகின்ற பிரதிநிதிகள் அரசியல் அறிவும் ஒழுக்கமும், அடக்கமும் உள்ளவர்களாக இருப்பது மட்டுமன்றி, தமிழ்ப்பேசும் மக்களாகிய இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுத்தரக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

அப்படி நமது உரிமைகள் பணபாடு, கலாச்சாரம் பேணிப்பாது காக்கப்பட வேண்டுமாயின் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளையே நாம் தெரிவு செய்து பாரா

(4ம் பக்கம் பார்க்க)

### வேட்பாளரும் வாக்காளனும்

நல்லூரில்:

வேட்பாளர்: (ஐந்து முறை தோல்விகண்டவர்) அப்பு! இந்த முறையும் லெக்சன் கேட்கிறேன்.

வாக்காளன்: ஏன் தம்பி இந்தமுறையும் தோற்கப் போறியோ?

### காரணம் எத்தனை காரணமோ?

கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காததனுலேயே தமிழ் காங்கிரஸ் கிழக்கு மாகாணத் தொகுதிகளுக்கு தனது வேட்பாளர்களை நிறுத்தவில்லை — ஜி. ஜி. (தினகரன் அறிக்கை).

எங்கள் தலைவர் திரு. பொன்னம்பலம் சுகவீனமாக இருந்ததனுல் தான் கிழக்கு மாகாணத் தொகுதிகளுக்கு தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தவில்லை — (மு. சிவசிதம்பம்—வவுனியா கூட்டத்தில்)

## பெருகி வரும் ஆதரவுகண்டு பெருச்சாளிகள் குலைநடுக்கம்!

நேமிநாதனுக்கு:

திருகோணமலை, ஏப். 26

'கடந்த எந்தத் தேர்தல்களிலும் காணப்படாத வகையில் ஒரு வித எழுச்சியும், உத்வேகமும் இம் முறைத் தேர்தலிலே திருகோணமலை வாழ் தமிழ்ப்பேசும் பொது மக்களிடையே குறிப்பாக



இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளதைக்காண முடிகிறது, என்று இங்குள்ள வயது முதிர்ந்த அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள இந்த எழுச்சியின் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. நேமிநாதன் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது உறுதியாகி விட்டது. இந்நிலையைக் கண்டு இங்குள்ள எட்டப்பர் கூட்டங்களும், ஐ. தே. கட்சி உட்பட ஏனைய கட்சிக்காரர்களும் கலக்க மடைந்த நிலையில் என்ன செய்வது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருக்கின்றனர்.

சென்ற வாரத்தில் இங்குள்ள லிங்கநகர் என்ற பகுதிக்கு வாக்கு வேட்டைக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் காடையரை விரட்டினர் செல்லத்தம்பு

வவுனியா, மே 1

தம்மைப் புடை சூழ்ந்து தாக்கவந்த காங்கிரஸ் காடையரை ஓட ஓட விரட்டியத்தார் வவுனியா தமிழ் அரசு வேட்பாளர் திரு. செல்லத்தம்பு. இச்சம்பவம் அண்மையில் நெடுங்கேணியில் நடைபெற்றது.

வவுனியாவில் தனது தேர்தல் சம்பந்தமான அலுவல்களை முடித்துக்கொண்டு முல்லைத் தீவு திரும்பும் வழியில் நெடுங்கேணியிலுள்ள தமது ஆதரவாளர்களைச் சந்தித்துப்பேச காரை ஒரு ஓரமாக நிறுத்தினர் திரு. செல்லத்தம்பு. நிறுத்தியதுதான் தாமதம். காரைச் சுற்றி காங்கிரஸ் காடையர் கூட்டம் ஒன்று செல்லத்தம்புவின் காரை மொய்த்தது.

உழவு யந்திரம் ஒன்றின் உதவியுடன் செல்லத்தம்புவின் காரை முட்டித்தள்ள முயன்றனராம். அப்போது அஞ்சாநெஞ்சினனாய் அவர்களுக்கு எதிர் சவால் விடுத்த செல்லத்தம்பு வெளியே வந்து ஒரே ஒரு சிம்மகர்ஜனை செய்ததுதான் தாமதம்— ஓடி மறைந்தது கூலிக்கு மாரடிக்கும் அக்காடையர் கூட்டம்!

### வேட்பாளரும் வாக்காளனும்

உடுப்பிட்டியில்:

கூட்டணி வேட்பாளர் ஒருவர்: என்னை அனுப்புங்கள். தமிழர்களுடைய பிரச்சினைகளை ஸ்ரீமாவோ அம்மையாரைக் கொண்டு தீர்த்து வைக்கிறேன்.

வாக்காளர்: உடுப்பிட்டியிலே, கூட்டணி வேட்பாளர்கள் இரண்டுபேர் மோதுகிறீர்கள். உங்கள் இருவருடைய பிரச்சினைகளையே தீர்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட உங்களாலேலட்சக்கணக்கான எங்களுடையபிரச்சினையைத் தீர்க்க முடியுமா?

## மூன்றரை லட்சம் மக்களுக்கு தனிக்குடியரசு!

மூன்றரை இலட்சம் மக்கள் வாழும் சின்னஞ்சிறு சாம்பியா நாடு தன்னையொரு குடியரசு நாடாக அண்மையில் பிரகடனப்படுத்தியிருக்கிறது:

ஆபிரிக்காவில் கறுப்பர் வாழும் குட்டிநாடு சாம்பியா. இங்கு $3\frac{1}{2}$ இலட்சம் மக்கள் வசிக்கிருர்கள். சாம்பியா ஆற்று ஓரத்தில் இந்த நாடு அமைந்துள்ளது.

சாம்பியா இங்கிலாந்தின் நிரவாகத்தில் இருந்துவந்த ஒரு நாடு. 1965ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

தமிழ் காங்கிரஸ் அறிக்கை—3

## பொன்னம்பலத்தின் "கிலி"

"சமஷ்டியை சிங்களவர் எதிர்ப்பதற்கு மூல காரணம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தென் இந்தியாவை அண்டிய கேந்திரஸ்தானத்தில் அமைந்திருப்பதால் ஏற்பட்டுள்ள 'கிலி' தான் என்று நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அல்லாமலும் தென்னிலங்கையிலே தமிழருக்கு இத்தகைய தனிப் பிரதேசம் அமைந்திருக்குமானல் சமஷ்டி அவர்களுக்கு கேட்டதும் கிடைத்திருக்கும் என்பதையும் நாம் நிச்சயம் உணர்கிருேம்—"

—தமிழ் காங்கிரசின் தேர்தல் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

இதை அப்படியே நாமும் ஒப்புக்கொள்கிருேம். சிங்கள மக்களிடம் சிங்கள அரசியற் தலைவர்கள் தங்கள் சுயநலத்துக்காக சமஷ்டி அரசியற் கொள்கை பற்றி பூச்சாண்டி காட்டி தேவையற்ற கிலியை இன்று வளர்த்து வைத்திருக்கிருர்கள். போதாக் குறைக்கு தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் சமஷ்டி யென்பது பிரிவினை யென்ற தவருன கருத்தை நாட்டில் வேண்டுமென்றே விதைத்து வருகிருர்.

எங்கே சிங்களமக்கள்சமஷ்டி அரசமைப்புத்திட்டத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து அதை ஏற்றுக்கொண்டு விடுவார்களோ—அப்படி ஏற்றுக்கொண்டால் தமிழரசுக் கட்சி நிலையாக வேரூன்றி விடுமே—நாம் நிரந்தரமாக தலையெடுக்க முடியாமற் போய்விடுமே—என்ற சுயநல அச்சத்தில் சமஷ்டிக் கொள்கைபற்றி சிங்கள மக்களுக்கும் பூச்சாண்டி காட்டுவதில் திரு. பொன்னம்பலமும் அதிக அக்கறையுடன் சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து ஈடுபட்டிருக்கிருர்.

நாம் திரு. பொன்னம்பலத்தை ஒன்று கேட்க விரும்புகிருேம். நாம் நமது வளவுக்குள் — அயல் வீட்டுக்காரனுக்கு எவ்வித தொல்லையும் கொடுக்காமல்—தனியே நமக்கென ஒரு வீடுகட்ட முயற்சியெடுக்கிருேம். அது அண்டை வீட்டுக்காரனுக்கு எரிச்சலாக—பொருமையாக—கிலியாக இருக்கிறதென்றல்—அதற்காக நாம் வீடுகட்டும் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு மரநிழலில்தான் என்றென்றும் படுத்துறங்க வேண்டுமா? நமக்கு சொந்தமானவளவைஎவராவது,கொள்ளைகொண்டு போகட்டும் என்று பார்த்துக்கொண்டு வாழாவிருக்க வேண்டுமா?

இவனை வீடு கட்டவிட்டால் அடுத்த தெருவில் குடியிருக்கும் மற்றொருவனுடன் சேர்ந்து தன்னை எதிர்ப்பான் என்ற வீண் பிரமையுடன் அண்டை வீட்டுக்காரன் எதிர்க்கின்றுன் என்றல் அவனது எதிர்ப்புக்கு அஞ்சி வீடே வேண்டாம்; தெருவில் படுத்துறங்குவோம் என்ற கோழைத்தனமான முடிவுக்கு வரவேண்டும் என்று திரு. பொன்னம்பலம் புத்திமதி கூறுகிருரா என்று கேட்கிருேம்.

தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்கள் தென்னிந்தியாவுக்கு நெருக்கமாக அமைந்துவிட்ட இயற்கையான காரணத்தால்—ஈழத தமிழினம் தனக்கெனத் தனிப்பிரதேசம், ஆட்சியுரிமை கோரக்கூடாதென்பதா திரு. பொன்னம்பலத்தின் சித்தாந்தம்?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற ஒரே காரணத்தால் தமிழ் பேசும் மக்கள் சிங்களவர்களது கிலிக்கு அஞ்சி, தங்கள் உரிமை உணர்வுகளையும், சுதந்திர இலட்சியங்களையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு சிங்கள மக்களிடம் சரணுகதியடைந்து விடவேண்டுமென்று ஆலோசனை கூறுகிருரா திரு. பொன்னம்பலம்?

தமிழ் பேசும் மக்கள் மூச்சு விடுவது கூட நாளை சிங்களவர்களுக்கு கிலியை மூட்டுவதாக இருந்தால்—தமிழ் பேசும் மக்கள் யாவரும் மூச்சை யடக்கிச் சாகவேண்டும் என்றும் "அட்வைஸ்" பண்ணுவாரா திரு. பொன்னம்பலம்?

சமஷ்டி கோரிக்கைபற்றி சிங்கள மக்களிடையே தவருன வியாக்கியானங்கள் — தப்பெண்ணங்கள் இன்று விதைக்கப் பட்டிருக்கலாம். ஆனல் எந்நாளும் இதே நிலைமைதான் தொடருமென்பது என்ன நிச்சயம்?

இந்நாட்டு இனப் பிரச்சினைகள் தீருவதற்கும், நாடு முன்னேறுவதற்கும் சமஷ்டியே ஒரே வழியென்று இந்நாட்டில் முதன் முதல் கருத்துத் தெரிவித்தவர் உண்மையில் ஒரு சிங்களத் தலைவரே. அவர்தான் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களாவர்.

கண்டியச் சிங்களவர்கள் தமக்கும் சமஷ்டி அரசியமைப்பின் கீழ் தனியரசு வேண்டும் என்று அடிக்கடி குரலெழுப்பி வருகிருர்கள். அரசியல் அமைப்புச் சட்ட தெரிவுக் கமிட்டியிடமும் சமஷ்டி அரசமைப்பு வேண்டும் என்று மக்கள் சமர்ப்பித்திருந்தார்கள் அண்மையில். இந்தக் கோரிக்கை நாளை ஏன் பெரிதாக வெடிக்க முடியாது?

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ. தே. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி ஆகிய சகல சிங்களக் கட்சிகளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில்—சமஷ்டியை அப்படியே ஏற்றுக் கொள்ளா விடினும்-சமஷ்டியாட்சிக்கு காலப் போக்கில் வழிவகுக்கக்கூடிய பிரதேச, மாவட்ட சுயாட்சிக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு தானிருக்கின்றன.

எனவே சமஷ்டி ஆட்சி கிடைப்பதும் கிடைக்காததும் தமிழ் பேசும் மக்கள் அந்த இலட்சியத்தையடைவதில் காட்டிவரும் உறுதியிலும் விசுவாசத்திலும்தான் தங்கியிருக்கிறது என்பதே நமது தீர்க்கமான கருத்தாகும். இதை விடுத்து சிங்களவர்களின் விருப்பங்களுக்கெல்லாம் தாளம் போடும் இனமாக தமிழினம் இந்நாட்டில் எந்நாளும் வாழ முடியாது.

சிங்களவர்களின் 'கிலி' யைக் கண்டு அஞ்சி தமிழ் பேசும் மக்கள் தங்கள் அடிப்படை இலட்சியங்களையும் சுதந்திரக் கோரிக்கையையும் ஒருபோதும் விட்டுவிட மாட்டார்கள்; தங்களுக்கெனத் தனி வீடு கட்டுவதை நிறுத்திவிடவும் மாட்டார்கள்.

ஏனெனில்—ஒரு பொன்னம்பலம் கோழையாக இருக்கலாம்.

ஆனல்—தமிழ் பேசும் மக்கள் கோழைகள் அல்லர்!

## தோழர் வி. பொன்னம்பலத்திடம் அளவெட்டி மாஜித் தோழர் விடுக்கும் பதின்மூன்று கேள்விகள்!

ஐயா பொன்னம்பலனரே!

தமிழரசுத் தந்தை செல்வாவை எதிர்த்து தேர்தலிலே போட்டி இடும் நீர் நான் எழுப்பும் இந்தச் சந்தேகங்கட்குப் பதில் தர முடியுமா? முடியுமானல் தவவு செய்து அதையும் உமதுபல தரப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் ஒன்ருக அச்சிட்டு வெளியிட வேண்டுகின்றேன்—

(1) அம்மையார் சிறிமாவோ அன்றுமுதல் இன்றுவரை தனிச்சிங்களமே இந்த நாட்டின் ஏக மொழியாக வேண்டும் என்று பேசி வருகின்ருர்—அவர் தமிழ் மொழிக்கு விசேஷ சரத்துக்களை வழங்கும் மசோதாவை கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தாரே இதை அவரது மூக்கூட்டு முன்னணி வேட்பாளர் என்ற ரீதியிலே முழுமனதாக ஏற்கின்றீரா? டாக்டர் விக்கிரமசிங்காவும் தோழர் கெனமனும் இதை முழுமனதாய் ஏற்று விட்டார்—தங்கள் நிலையாதோ?

(2) அம்மையார் ஆட்சி ஏற்ருல், கோட்டுமொழி சிங்களமாகி விடும்—இதை அம்மையார் வலி உறுத்தி வருகின்ருர்— இதற்கு நீர் மறுப்பா அல்லது எதிர்ப்பா?

(3) கதிரவேற்பிள்ளை முதலாக பல தமிழரசு வாதிகள் சாதி பேதத்தை எதிர்த்து வழக்காடியும் வந்தனரே நீர் மட்டும் இதில் ஏன் மொட்டாக்குக்குள் கை காட்டி வருகிறீர்? துணிவிருந்தால் உமது சொந்த ஊரான அளவெட்டி கும்பளாவளை விஞயகர் ஆலயத்துள் அழைத்துச் சென்று பொதுவுடமைத் தத்துவத்தை நிலை நிறுத்தி இருக்கலாமே?

(4) சொந்தக் கிராமத்தில் ஆலயப் பிரவேசம் தேநீர்க் கடைப் பிரவேசம் செய்ய முடியாத நீரா ஓர் இனத்தின் விடுதலையை சிறிமாவிடம் பெற்றுத்தரப் போகிறீர்?

(5) உம் சொந்த ஊர் வைகுந்தவாசன் முதலாக பல கொம்மியூனிஸ்டுகள் சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்து 'சைஞ' கொம்மியூனிஸ்டுகள் ஆகிவிட நீர் மட்டும் ஏன் மொஸ்கோ லைனில் நிற்கிறீர் — பார்லிமெண்டுக்கு போகவா? அல்லது சிங்களத்தை திணிக்கவா?

(6) வட கிழக்கு இலங்கையில் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றத்தை வரவேற்கிருர் சிறிமாவோ அம்மையார்—இதை மூக் கூட்டு முன்னணியும் ஏற்றுள்ளது—இதில் உமது நிலை யாதோ?

(7) 'நீர்மல்லாகம்—அளவெட்டி' கிராமச்சபைத் தலைவராக இருந்தமையால் அளவெட்டி எல்லையில் அளவெட்டி பெயர் பலகையை நட்டு வைத்திருக்கிறீர்—நன்றி அதில் கொட்டை எழுத்தில் முதலாவதாகச் சிங்களத்தில் எழுதியது எதற்காக— நியாயமான தமிழ் மொழி விதிகளை எதிர்ப்பதைக் காட்டவா?

(8) கிழக்கிலங்கையில் தமிழர் பல்கலைக் கழகம் நிறுவினல் கிழக்கிலங்கை தமிழ்மயமாகிவிடும் இதை விக்கிரமசிங்காவும், கெனமனும் விரும்ப மாட்டார்கள்—என்பதற்காகவா யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் என்று நோட்டீசு அடிச்சு விட்டிருக்கிறீர்—

(9) பாராளுமன்றத்தில் முக்கூட்டு முன்னணி வீரர் பீலிக்ஸ் டயஸ் பேசுகையில் ஒரு மொழி, ஒரு இனம் இதனல் தான் ஒற்றுமை ஏற்படும் என்று பேசியுள்ளாரே-நீரும் இதை ஏற்கத்தானே வேண்டும்—முக்கூட்டு முன்னணியில் நீரும் முழுமையான உறுப்பினரல்லவா?

(10) மாவட்ட சபை போன்ற பரந்த சமஷ்டி அடிப்படையிலேதான் ருஷ்ய நாட்டு இனவழி மொழிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன—ஆனல் அவை உதவாது என்கிருரே உமது சகா கெனமனும்—விக்கிரமசிங்காவும்— உமது நிலை யாதோ?

(11) தமிழினத்தை நிந்தித்துச் சிங்களத்தலைவர்கள் (கெனமன் விக்கிரமசிங்கா) உட்பட தோசை, வடை, நல்லெண்ணை என்று தூற்றித் திரிந்தார்களே— அப்போது பொன்னம்பலனரே நீர் எங்கே போயிருந்தீர்?

(12) தமிழ் மொழிச் சட்ட விதிகளை ஜனவரி 8ல் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது தோழர்—பீற்றர் கெனமன் இச்சட்டம், தமிழ் மொழிக்குச் சிங்கள மொழியை விட அதிக அந்தஸ்து கொடுப்பதாக வயிறெரிந்து வாந்தி எடுத்தாரே — இப்பிரச்சினையில் உமது குருதேவர், கெனமனை ஆதரிக்கின்றீரா அல்லது எதிர்க்கின்றீரா?

(13) ருஷ்ய நாட்டு மாமேதை லெனினை நினைந்து கசிந்துருகிக் கண்ணீர் வடிக்கின்றீரே— அவர் சொன்ன மொழிவழி மாகாண சுயாட்சியை தானே தமிழரசுக் கட்சி இங்கும் கோருகிறது. அதை ஏன் நீரும் உமது கட்சியும் எதிர்க்கிறீர்கள்?

## தனித்தமிழ் ராஜ்யம்கோரியநீங்கள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போதைய தலைவர் பொன்னம்பலம் அவர்களுக்கு உங்கள் தனித் தமிழ் ராஜ்யம்' புத்தகப் பிரதியில் ஒன்றைக் கொடுத்து முதலில் அவரைத் திருத்தி விட்ட பின்னர் அல்லவா நீங்கள் தமிழ்க்காங்கிரசில் சேர்ந்திருக்கவேண்டும்!

உங்கள் தலைவர் பொன்னம்பலமோ 'தமிழுக்கு இலங்கை பூராவும் சிங்களத்தோடு சம அந்தஸ்து பெற்றுத் தருவேன்!' என்கிருர். ஆனல் நீங்களோ 'தனித் தமிழ் ராஜ்யம்' நூலில் "பாஷைக்குச் சம அந்தஸ்து கிடைக்கும் என்பது பகற் கனவு" என்று கூறுகிறீர்கள். இது உங்கள் நூலில் நீங்களே எழுதியுள்ள வாக்கியம்! இவ்வாக்கியம் உண்மையானல் ஏனையா பகற்கனவு காணும் பொன்னம்பலத்துக்குப் பின்னல் சுற்றுகிறீர்கள்?

### முருங்கக்காயும் பனங்காயும்

'தனித் தமிழ் நாடா? யாழ்ப்பாணத்தில் என்ன இருக்கிறது? பனங்காய்களும் முருங்கைக் காய்களும் தானே உண்டு' என்கிருர் உங்கள் தலைவர் சீமான் பொன்னம்பலம். ஆனல் 'தனித்தமிழ் ராஜ்யம் நூலில் நீங்கள் என்ன சொல்லி இருக்கிறீர்கள்?

"பிரிவினல் தமிழ் நாடு பொருளாதாரத் துறையில் தனித்தியங்க முடியாது என்ற பயம் தமிழ் மக்களிடையே இருந்து வருகிறது. தமிழ் ராஜ்யம் விவசாயத் துறையில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாயும் கைத்தொழில் துறையில் முன்னேறுவதாயும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை"

ஐயா தியாகராசா அவர்களே! தயவு செய்து அன்று நீங்கள் எழுதிய தனித்தமிழ் ராஜ்யம் நூலை இன்னொரு முறை இன்று படித்துப் பாருங்கள்! பொன்னம்பலத்துக்குப் பின்னல் யார் போனலும் போயும் போயும் நீங்கள் போகலாமா?

எங்களுக்குத் தெரியும்! உங்களைப்போல் சிலருக்கு தமிழ் நாடு பற்றியோ தமிழ் ராஜ்யம் பற்றியோ தமிழர் வாழ்வு பற்றியோ கவலையில்லை! உங்கள் கவலையெல் தமிழரசுக் கட்சியை எப்படி முடித்துக் கட்டுவது என்பது ஒன்றே தவிர வேறு எதுவும் இல்லை!

கொள்கை இல்லாத எத்தனை கூத்துக்களை நடத்திக் காட்டுகிறீர்கள்? குத்துக்கரணங்களில் எத்தனை சாதிக் குத்துக்கரணங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்?

ஐயா தியாகராசா! ஒன்றை மட்டும் நீங்கள் உறுதியாக நம்பலாம். வட்டுக் கோட்டை தமிழரசுக் கட்சியின் வலியகோட்டை! கடைசி வரை அது கட்சி மாளிகையாகவே விளங்கும்!

—

## தமிழ் காங்கிரஸ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பூர் வாக்குகள் அனைத்தும் சிங்கத்தமிழன் தங்கத்துரை அவர்களுக்கே. ஏனைய மூதூர் தொகுதி அபேட்சகர்கள் சம்பூருக்கு வராமல் இருப்பதுதான் அவர்களுக்கு நல்லது. எங்களுக்கும் ஏற்றது.

தொடர்ந்து ஈழமதி குலேந்திரன், கட்டைபறிச்சான் கி. சபைத் தலைவர் செ. இராசரெட்ணம், அருளப்பு ஞேச்டீவாஸ், அ. தில்லையம்பலம் முதலானேரும் உரையாற்றினர். வே. கோணமலை அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்திற்கு சம்பூர் கிராமம் வாழ் ஆண், பெண் அனைவருமே திரண்டுவந்திருந்தனர்.

## தியாகராசாவே திரும்பிப் பார்!

# தனித் தமிழ் ராஜ்யம் கோரிய நீங்கள் ஒற்றையாட்சிக்கு இன்று அடி வருடுவதேன்?

## தமிழ் காங்கிரஸ் டிக்கெட்டுக்காக கொள்கைமாறிக் குத்துக்கரண மடித்தீரா?

## பகற்கனவு காணும் பொன்னருடன் சேர்ந்து பகற்கனவு காணுகிறீர் பரிதாபம் உம் முடிவு!

தமிழரசுத் தளபதி அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் தியாகராசா என்பவர் 14 ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வெளியிட்ட 24 இலட்சம் மக்களுக்கு 'தனித் தமிழ் ராஜ்யம்' என்னும் நூலின் முன் அட்டைப்படத்தையே இங்கு 'போட்டோஸ்ராட்' பிரதி வடிவில் வெளியிட்டிருக்கிறோம்.

தமிழரசுக் கட்சிக்காரன் தான் தமிழர்களுக்கு அடி வாங்கிக் கொடுத்தான் என்று இப்போது காங்கிரஸ்காரர்கள் பேசி வருகிறார்கள். ஆனால் 14 ஆண்டுகளுக்கு முன்பு 1956 ஆம் ஆண்டு நமது காங்கிரஸ் வேட்பாளர் தியாகராசா 'தனித்தமிழ் ராஜ்யம்' நூல் வெளியிட்ட போது தான் உண்மையிலேயே இந் நூலின் அட்டைப்படத்தைப் பார்த்த சிங்கள மக்கள் கொதித்து எழுந்து தமிழர்களைத் தெருத் தெருவாக ஓடவிட்டு அடித்தார்கள்! 'தனித்தமிழ் ராஜ்யம்' நூல் எழுதி அன்று தமிழர்களுக்கு அடியும் உதையும் வாங்கித் தந்த தியாகராசா இன்று என்ன ஆனார்? இவரது நூலைப் படித்து விட்டு எந்தச் சிங்கள வெறியர் தமிழனுக்கு உதைத்தார்களோ அதே சிங்கள வெறியருக்கு பாதந்தாங்கிப் பணிவிடை செய்யப் போகும் காங்கிரசோடு இரண்டறக் கலந்தார்.'

### பிரிந்து வாழ வேண்டும் என்றார்

தியாகராசாவின் 'தனித் தமிழ் ராஜ்யம்' நூலின் 8 ஆம் பக்கத்தில் அப்போதைய தனித்தமிழ் ராஜ்ய தலைவரும் இப்போதைய காங்கிரஸ் வேட்பாளருமான தியாகராசா பின்வருமாறு எழுதுகிறார்:—

''இலங்கையில் வகுப்புவாதப் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது. சிங்களவருடைய தாழ்வு மனப்பான்மை தாராள மனப்பான்மைக்கு இடமளிக்காது. ஆகவே நாம் எவ்வளவு கூடிய கெதியில் பிரிந்து வாழமுடியுமோ அவ்வளவுக்கு நல்லது''

இப்படி அன்று எழுதிய தியாகராசாதான் இன்று தமிழ் தமிழ் என்று சொல்லி சிங்களவருக்குக் கோபத்தை உண்டாக்காமல் சிங்களவரோடு சேர்ந்து உரிமைகளைக் கெஞ்சிப் பெறுவோம் என்று சொல்லும் காங்கிரசோடு கலந்து கிடக்கிறார்.

திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களை தனது 'தனித் தமிழ் ராஜ்யம்' நூலில் தியாகராசா குறிப்பிடாமல் குறிப்பிட்டு பின்வருமாறு சாடுகிறார்.

''சிங்களவருடன் காரியங்களைச் சீர்படுத்திக் கொண்டு...... வாழமுடியுமென சில தமிழ்த்தலைவர்கள் எண்ணுகின்றனர். இது போன்று தமிழரை அழிக்கக்கூடிய வழி வேறில்லை.''

### ஜீ. ஜீ.க்கு போதியுங்கள்

ஆகா......என்ன அருமையான கொள்கை! ஐயா தியாகராசா! உங்கள் தற்

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் காங்கிரஸ் கிழக்கை யூ. என். பிக்கு விற்றுவிட்டது!

### சம்பூரில் தங்கத்துரை முழக்கம்!

சம்பூர், மே. 1

''தமிழ் அரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளைப் புரியாமல் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் மாறுபாடாக நடந்து கொள்வது கவலைக்குரியதாகும்.



உண்மையிலேயே த. அ. க. கொள்கைகளை அறிந்த எந்தத் தமிழ் பேசும் மகனும் அக்கட்சிதன்னை ஆதரிக்காமல் இருக்கமாட்டான்.

இன்றைய இலங்கையில் தமிழ் பேசும் இனத்திற்காக அல்லும், பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக் ஒரேயொரு கட்சி தமிழ் அரசுக் கட்சியேயொழிய வேறெக் கட்சியும் இல்லை. தமிழ் காங்கிரஸ் கட்சி அன்று முதல் இன்று வரை எமது இனத்தை மீண்டும் மீண்டும் அடிமைபாதைக்கே இழுத்துச் செல்கின்றது.

தமிழ்காங்கிரஸார் கிழக்கு மாகாணத்தை ஐ. தே. கட்சிக்கு விற்றுவிட்டார்கள் என்று தான் கூற வேண்டும். காரணம் சென்ற முறை பல இடங்களில் வேட்பாளர்களை நிறுத்தியவர்கள் இம்முறை ஒரு தொகுதியில் கூட வேட்பாளர்களை நிறுத்தவில்லை. எனவே தமிழ்பேசும் இனம் விமோசனம் அடைவதாக இருந்தால் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஏகோபித்த முறையில் ஆதரித்தனுப்ப வேண்டும்.

கடந்த பல காலமாக மூதூர் தொகுதி பல் வகைகளிலும் முன்னேற்றமடையாமல் இருப்பதை இன்று நாம் அனைவரும் காண முடிகின்றது. குறிப்பாகத் தனித் தமிழ் கிராமமான சம்பூர் பகுதி இன்று பல்வகைப்பட்ட துறைகளிலும் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வருவதை தான் அறிகின்றேன். வீதிகள் நல்ல முறையில் இல்லை அதனால் பஸ் போக்குவரத்து வசதிகள் சீராக நடை பெறுவதில்லை. கட்டபறிச்சான் துறைக்குப் பாலம் அமைக்காமையினால் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கான வசதிகள் பல தடைப்பட்டிருக்கின்றன. நிலையான, தரமான வைத்தியசாலை இல்லை. அதனால் பொதுமக்கள் பெரிதும் அவலநிலை அடைகின்றனர்.

இப்பகுதிகளில் பெரிதளவில் மந்தைகள் இருந்தும் அவைகளுக்கென ஓர் மேய்ச்சல் நிலம் கூட இல்லையே என்பதையிட்டுப் பெரிதும் துக்கமடைக்கின்றேன். அது மட்டுமல்ல விவசாயத்தை நம்பி வாழும் இப்பகுதி மக்களின் நலனுக்காக இளக்கந்தைக் குளம் விஸ்தரிப்புத் திட்டம் கட்டாயம் நடைபெற வேண்டும். இவைகளைக் கடந்த காலச் சிங்கள அரசாங்கம் இரண்டும் தமது அரசாங்கக் காலங்களில் செய்யத் தவறி விட்டது. இவைகளை மேற்படி அரசாங்கம் நினைத்திருந்தால் செய்திருக்கலாம் ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை காரணம் சம்பூர் தனித் தமிழ் கிராமம் ஆன காரணத்தால். எனவே தன்னிகரில்லாத் தமிழ் பேசும் இனமே எமது எமது வருங்காலச்சந்ததியின் நலன் கருதி மூதூர் தொகுதியைப் பலதுறையிலும் முன்னேற்றமடையச் செய்யும் நோக்குடன் இந்தச் சிறுவயதில் அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து அரசியலில் புகுந்துள்ள எனக்குச் சேவை செய்யஏற்றதொரு சந்தர்ப்பத்தை அளிக்கும்படி உங்களை அன்பாய் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு கடந்த 25ம் திகதி மாலை சம்பூரில் த. அ. க. கிளையினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மூதூர் சிங்கம் அ. தங்கத்துரை அவர்கள் குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து பேசிய சம்பூர் தமிழ் அரசு வாலிப முன்னணித் தலைவர் வ. சித்திரவேலாயுதம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

சென்ற முறை நாங்கள் முகமது அலி அவர்கள் மேல் கொண்டிருந்த கோபத்தால் ஜனாப் அப்துல் மஜீத் அவர்களை ஆதரித்தோம் ஆனால் இம்முறை எமது உயிர் போகினும் சரி மேடைக்கு மேடை பொய்வாக்குகள் கூறும் மஜீத் அவர்களையோ அல்லது எமது கட்சியையும் தமிழ் பேசும் மக்களையும் அவல நிலைக் குட்படுத்திய முகமது அலி அவர்களையோ ஆதரிக்கமாட்டோம்.


எமது வாழ் நாள் முழுதும் இனிமேல் தமிழரசாரையும் மூதூர் சிங்கம் அண்ணன் தங்கத்துரை அவர்களையுமே ஆதரிப்போம் தனித் தமிழ் கிராமமான எமது

(2-ம் பக்கம் பார்க்க)

24 லட்சம் மக்களுக்கு

# தனித் தமிழ் ராஜ்யம்

(காஷ்மீர் போன்றது)




ஆ. தியாகராசா. M A, M. Litt.,

காரைநகர்

1956

இன்று ஒற்றையாட்சி பொன்னம்பலத்தின் தாசானுதாசனாகிவிட்ட தமிழ் காங்கிரசின் வட்டுக்கோட்டை வேட்பாளர் ஆ. தியாகராசா 1956ம் ஆண்டு வெளியிட்ட 'தனித் தமிழ் ராஜ்யம் எனும் புத்தகத்தின் அட்டைப்படத்தையே இங்கு காணுகிறீர்கள். இதைக் காட்டிக் காட்டித்தான் 1956ம் ஆண்டு தமிழர்களை சிங்கள வெறியர்கள் தாக்கினார்கள்.'

## மின்சார விஸ்தரிப்பு வெகுவிரைவில் கிடைக்கும்

### யாழ். மாநகர மக்களுக்கு மேயர் விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம், மே. 1

மின்சாரம் இல்லாது கஷ்டமுறும் வரியிறுப்பாளர், பொதுமக்கள் தத்தமது வட்டாரங்களில் புதிது புதிதாக மின்சார விஸ்தரிப்புக்களை மேற்கொள்ள முடியாதிருப்பதற்கு மாநகரசபை வருந்துகிறது.

எனினும், உவோல்ற்றளவில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியைப் போக்குமுகமாக மூலக் கம்பிகளை மீள அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற மாநகரசபை ஊக்குவித்து வருகின்றது. எனவே. எவ்வளவு விரைவில் புதிய விஸ்தரிப்புக்களைச் செய்துதர முடியுமோ அவ்வளவு விரைவில் செய்துகொடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக உவோல்ற்றளவைப் பெருக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொதுமக்கள், வரியிறுப்பாளர்களுக்குப் பணிவன்புடன் அறியத்தருகிறேன்.


விரைவில் எமக்குக் கிடைக்கவிருக்கும் மஸ்கேலியாத் திட்ட மின்சாரத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ற நிலையில் எமது திட்டத்தை வலுப்படுத்தும் வேலைகள் -மூலக் கம்பிகளை மீள அமைத்தல், மின் நிலையங்களை வலுப்படுத்தல், புதிய மின் உப நிலையங்களை அமைத்தல் போன்ற வேலைகள் - சமீபத்தில் ஒப்பந்தத்தில் கொடுக்கப்படவுள்ளது. எனவே, பொதுமக்கள், வரியிறுப்பாளர்களுக்குள்ள கஷ்டங்கள் இன்னும் ஆறு ஏழு மாதங்களுக்குள் முற்றாக நீங்கிவிடும். —இவ்வாறு யாழ் மாநகர முதல்வர் திரு. தா. ச. துரைராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரன்
SUTANTIRAN

**தமிழரசுத் தழல் மொழிகள்!**

அடிமையாக வாழ ஒரு போதும் ஒருப்படேன். அதை விட சுட்டுக் கொல்லப் படுவதையே நான் விரும்புகிறேன்.

—தந்தை செல்வா.



# பொன்னம்பலத்தை புறமுதுகிட வைத்த 17 கேள்விக்கணைகள்!

(கைதடி நிருபர்)

அண்மையில் கைதடியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் பின்வரும் 17 கேள்விக்கணைகள் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை நோக்கி விடப்பட்டன. கேள்விகளுக்கு கூட்டமுடிவிற் பதில் சொல்லுவதாக தெரிவித்த திரு. பொன்னம்பலம், இறுதியில் நேரம் போய்விட்டது என்று கூறி கூட்டத்தை முடித்துக் கொண்டு புற முதுகிட்டோடினுர் என்று அறியப்படுகிறது.

பொன்னம்பலத்தை புறமுதுகிடச் செய்த இக் கேள்விகளை கைதடியைச் சேர்ந்த திரு. த. சிவராஜா, அ. சிவலிங்கம் ஆகியோராவர் கேட்டிருந்தனர்.

கேள்விக்கணைகள் பின்வருமாறு:—

(1) 1965ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றியூட்டிய மூன்று காங்கிரஸ் உறுப்பினர்களாகிய நீங்கள் தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக ஏதாவது ஒப்பந்தத்துடன் அரசாங்கத்தில் சேர்ந்தீர்களா?

(2) தமிழ்மொழி விசேஷ மசோதாவை பாராளுமன்றத்தில் ஆதரித்து விட்டு அதை வெறும் ஏமாற்று வித்தை என்று வெளியில் ஏன் கூறுகிறீர்கள்?

(3) வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதினெட்டு ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு திருமலையில் தமிழ் பல்கலைக்கழகம் நிறுவவெனறு அரசாங்கத்தை கேட்க நீங்கள் மூவரும் அதை ஏன் மூர்க்கத்தனமாக எதிர்த்தீர்கள்?

(4) இந்துப் பல்கலைக்கழகம் கேட்கும் நீங்கள் திருகோணேஸ்வர புனித நகர் பிரச்சினையில் தமிழரசார் அரசாங்கத்தைவிட்டு வெளியேற நீங்கள் எதற்காக ஐ. தே. க. அரசாங்கத்துடன் ஒட்டியிருந்தீர்கள்?

(5) 1965ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரின் . உரிமையைப் பெற்றுதராவிடில் மூன்று மாதத்தில் பதவியை உதரித் தள்ளுவேன் என்றீர்களே? மூன்று வருடம் சென்றும் அதை செயலில் காட்டினீர்களா?

(6) இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உங்கள் கட்சி பாராளுமன்றத்தில் ஆதரிக்கவில்லையா? உங்கள் கட்சிக் கூட்டங்களிலே தமிழரசார் துரோகம் செய்து விட்டதாக நீலிக் கண்ணீர் வடிக்கின்றீர்கள் உண்மை யெங்கே?

(7) 1968ம் ஆண்டு கைதடியில் சிங்கள குடியேற்றம் நடைபெறப் போகுது என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டு கூட்டமும் கூட்டி ஓலமிட்டீர்களே சிங்கள குடியேற்றம் நடைபெற்றதா? இது வெல்லாம் ஏமாற்று வித்தையல்லவா? நீங்கள் மந்திரி பதவியில் இருந்த சமயம் பட்டிப்பளை அம்பாறை கல்லோயா பதவியா போன்ற தனிதமிழ் கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேறவில்லையா? இதை மூடி மறைக்க முடியுமா?

(8) தமிழ் மக்கள் தந்த 65 தங்கப்பவுண் மாலையைக் கொண்டு வடமாகாணத்தில் ஒரு தொழிற் சாலையை நிறுவப் போவதாக கூறினீர்களே செயலில் இறங்கினீர்களா??

(9) பண்டா - செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறியுங்கள் பத்து நாட்களுக்கிடையிலே மாற்று திட்டம் தருவதாக கூறினீர்களே. 144 மாதங்களாகியும் கொடுத்தீர்களா?

(10) சம அந்தஸ்து வட்டமேசை என்று கூறி திரிகின்றீர்களே ஒரு நாளாவது சம அந்தஸ்தைப் பற்றி 1965—1970 வரை நாடாளுமன்றத்தில் பேசியதுண்டா?

(11) சுகவீனம் காரணமாகத்தான் கிழக்கு மாகாணத்தில் தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தவில்லையென்று கூறும் நீங்கள் எதற்காக மன்னுரில் அபேட்சகரை நிறுத்தியது? வடமாகாணத்துக்குள் வாலை சுருட்டிக்கொண்டீர்கள்?

(12) இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையை கூறி அரசியல் இலாபம் காண முற்படும் உங்கள் வடமாகாண வேட்பாளர்கள் அனைவரும் உங்கள் கண் மூன்று முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதியில் வேலையில்லா பிரச்சினையில்லையா? ஏன் இலங்கையின் பிரதம மந்திரியின் தொகுதியான டெடிகமையில் இல்லையா? ஏன் இந்த பிரச்சினைக்கு தீபம் இட்டு வீர இளைஞர்களை மயக்க முற்படுகிறீர்கள்?

(13) சிறுபான்மை தமிழ் மக்களின் தீண்டாமை ஒழிப்பில் உங்கள் கட்சியின் கொள்கை என்ன? ஏன் அவர்கள் பிரச்சினையில் மதில்மேல் பூனையாக இருக்கின்றீர்கள்?

(14) மீண்டும் எங்களை அனுப்புங்கள் தமிழ் மக்களின் உரிமைகளை இரண்டு வருடத்தில் பெற்றுத் தருவதாக கூறுகின்றீர்களே எந்த உரிமையைப்பெற்றுகொடுக்கப்போகின்றீர்கள்?

(15) இலங்கை வாழ் தமிழ் பேசு மினத்திற்கு முதல் தேவை நாடும் மொழியுமல்லவா? இவையில்லாது, பட்டம், பதவி பெரிய தொழிற்சாலை பாலங்கள் மதகுகள் கட்டிடங்கள் மூலம் இந்த நாட்டில் தமிழினம் வாழமுடியுமா?

(16) இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி கூடாது என்று கூக் குரலிடுபவர்களே இலங்கையை விட சின்ன சிறிய நாடுகளில் சமஷ்டி ஆட்சி நடை பெறவில்லையா?

(17) 50க்கு 50கேட்பேன் ஒன்று குறைந்தாலும் பெற மாட்டேன் என்ற நீங்கள இன்று ஒற்றை ஆட்சியில் 80: 80 வீதத்தை ஏற்று எதையாவது பெற்றீர்களா? இனிமேல் என்ன உரிமைகள் பெறப் போகின்றீர்கள்— மந்திரி பதவியா.........?

---

**பத்தாண்டுகளாக**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்கிருர்கள். மக்கள் மன்றங்கள் மாவட்டசபையின் மறு பெயராகும். மக்கள் மன்றங்கள் நிறுவப்பட்டால் நாடு தமிழ்ப் பகுதி, சிங்களப் பகுதியென இரு கூருகப் பிளவு பட்டுவிடும்—

தற்போது இல்லாத அதிகாரங்களை மக்கள் மன்றங்களின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களுக்கு கொடுத்தால்— சிங்களவர்களுக்காக ஆரம்பத்தில் இருந்த கிளிநொச்சிக் குடியேற்றத்தில் 1956க்குப் பின் சிங்களவர்கள் குடியேருது தடுக்கப்பட்டதுபோல், ஏனைய பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்களை தடைசெய்து விடுவார்கள்'' என்று குறிப்பிட்டார்.

---

## 3-5-70ல் நடைபெறும் தமிழரசுக் கூட்டங்கள்

தொகுதி: நல்லூர்

பேச்சாளர்: அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், கா. பொ. இ. இ. மு. வி. நாகநாதன்.

ஃ ஃ ஃ

தொகுதி: வட்டுக்கோட்டை

பேச்சாளர் அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், டாக்டர் நாகநாதன்.

தொகுதி: கிளிநொச்சி; பேச்சாளர்: துரைரத்தினம், நவரத்தினம், மார்ட்டின், ஜெயக்கொடி, மு. ஆலால சுந்தரம்.

---

**பெருகி வரும் ஆதர...**

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற ஸ்ரீ. ல. சு. க. வேட்பாளர் திரு. ஜமால் தீனுக்கு அங்குள்ள மக்கள் வார்த்தைகளால் நல்ல சவுக்கடி கொடுத்து அனுப்பியுள்ளனர். அதே போல் ஐ. தே. க. வேட்பாளர் திரு. நவரெட்ணராசா வாக்கு வேட்டைக்காக செல்லு மிடங்களிலெல்லாம் எதிர்பாராத ஏமாற்றங்களே பதிலாகக் கிடைக்கின்றன. மற்றைய வேட்பாளர் ஆர். ஜி. சேனநாயக்காவையோ இப்பக்கமே காணவில்லை. மற்றைய வேட்பாளர்க்குரிய வரவேற்புகள் இந்நிலையில் இருக்கையில் தமிழரசு வேட்பாளர் திரு. நேமிநாதன் வாக்கு கோரிச் செல்லு மிடங்களிலெல்லாம் ஆதரவாளர்களின் அன்பு வெள்ளத்தில் மூழ்கி கரையேற முடியாத நிலையில் தத்தளிக்கின்றுர். செல்லுமிடங்களில் எல்லாம் சீரான வரவேற்பு, பூரண கும்பங்கள், நிறை குடங்கள் வைத்து வரவேற்று மாலையிட்டு, வெடிகளை முழங்கி, ஆதரவான வார்த்தைகளை நல்கி, அன்போடு அனுப்பி வைக்கின்றனர் மக்கள்.

சென்ற 27-4-70 அன்று மாலை திரு. நேமிநாதன் தனது ஆதரவாளர்களுடன் ஆருரும் வட்டாரத்திற்கு வாக்குவேட்டைக்காகச் சென்றுர். அங்கு மக்களால் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்போ வார்த்தைகளால் சொல்லமுடியாத அளவிற்கு இருந்தது. சிவபுரி வீச்சுக்காரத்தெரு ஆகிய பகுதிகளுக்குச் சென்றபோது அளிக்கப்பட்ட வரவேற்பு: தேர்தலில் வெற்றிபெற்று வரும் ஒரு வேட்பாளருக்கு அளிக்கப்படும் வரவேற்பாக இருந்தது. நேமியின் கழுத்தில் விழுந்த மாலைகளுக்கோ கணக்கில்லை.

இது போன்ற வரவேற்பே பாலையூற்று பகுதிக்குச் சென்றபோது நேமிக்குக் கிடைத்தது.

நேமிக்குக் கிடைக்கும் இத்தகைய வரவேற்புஉபசரணைகளைக் கண்டு, மற்றைய வேட்பாளர்கள், ''ஏன்தான் இத் தேர்தலில் போட்டியிட்டோமோ தெரியவில்லை'' என்று முணுமுணுக்கின்றுர்களாம்.

---

**பிரிவினைச் சூழ்ச்சி...**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அதை விடுத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரதிநிதிகளையோ, ஐக்கிய தேசியக்கட்சியையோ தெரிவுசெய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பினேமானல் எங்களுரிமை பறிக்கப்பட்டுத் தமிழ்ப்பேசும் மக்களும் அழிக்கப்படுவது நிச்சயம்.

இலங்கையிலே வாழுகின்ற இஸ்லாமியரும் தமிழர்களும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். கலாச்சாரப் பண்பாட்டால் இரண்டறக் கலந்தவர்கள். இப்படிக் கலந்து வாழுகின்ற தமிழ்ப் பேசும் இனத்தை, சிங்களத் தலைவர்கள் முஸ்லிம் தமிழன் என்ற பாகுபாட்டைக் காட்டிப் பிரித்தாள எண்ணுகின்றனர். நாம் அவர்களின் பிரித்தாளும் முயற்சிகளுக்கு அற்ப சலுகைகளை ஏற்று, அவர்களின் ஆசைவார்த்தைகளை நம்பினுல் நிச்சயம் தமிழ்ப்பேசும் இனம் இலங்கையில் அழிந்தொழிந்து போவது நிச்சயம்.

எனவே கல்முனைத் தொகுதியில் வாழுகின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரணி திரண்டு கட்சியின் வேட்பாளர் டாக்டர். உதுமாலெவ்வையைப் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்தனுப்பும்படி வேண்டுகின்றேன்.

---

**வெறிபிடித்த...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யூ. என். பி. அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. ஆனல் தமிழ்க் காங்கிரஸ் அத் தொகுதிகளில் போட்டியிடவில்லை; வட மாகாணத்தில் மாத்திரம் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகிருர்கள் காங்கிரசார். இவர்கள யூ. என். பி.யின் வடபிராந்திய பிரதிநிதிகள் ஆகும்.

அடுத்து இத்தொகுதியில் பலசேவைகளைச் செய்தோம் எனக் காங்கிரஸ் கட்சியினர் கூறுகின்றனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட சிலருக்கு சமாதானநீதவான் ஜே. பி. பட்டத்தை எடுத்துக்கொடுத்தார். இன்னும் ஒரு சிலருக்கு கண்டக்டர் (பஸ் பாதுகாவலர்) உத்தியோகம் எடுத்துக் கொடுத்தார்கள் ஒரு சில ஆசிரியரின் இடமாற்றங்களை ரத்துச் செய்தார்கள்.

தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அப்படியல்ல. உதாரணமாக எமது சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. நவரத்தினம் அவர்கள் தமது தொகுதியில் கண்டக்டர் வேலைக்கு விண்ணப்பம் செய்தவர்களை ஒரு பாடசாலை மண்டபத்திற்கழைத்து, அவர்களனைவரது பெயர்களையும் குலுக்கி அதிர்ஷ்டம் பார்த்து தெரிவு செய்தார்,

மற்றது இந்தப் புலோலி ஆஸ்பத்திரியை தரத்தில் உயர்த்தினேம், ஆஸ்பத்திரிக்கான சில கட்டிடங்களைக் கட்டினேம்; எனக் கூறுகிருர்கள் இந்தக் காங்கிரசார்.

1956 தேர்தலின் பின் வடக்கிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சாவகச்சேரியையா அல்லது புலோலி ஆஸ்பத்திரியையா விஸ்தரிப்பதென அரசாங்கம் பிரச்சினையைக் கிளப்பியது. இந்த நேரத்தில் காலஞ் சென்ற மதிப்பிற்குரிய திரு. கந்தையாவும், சாவகச்சேரி நவமும் தங்கள் தங்கள் தொகுதி வைத்திய சாலையைத் தான் உயர்த்த வேண்டும எனக் கூறினுர்கள். அதன் பயனுகத்தான் புலோலி வைத்திய சாலை விஸ்தரிக்கப்பட்டது.

நீங்கள் இம்முறையும் அதிக தமிழரசு உறுப்பினர்களைத் தெரிவு செய்யவேண்டும். சென்ற முறை யூ. என். பி.யினர் 61 ஸ்தானங்களுடன் அரசாங்கம் அமைக்க முடியாமல் தமிழரசு உதவியை நாடினுர்கள். தமிழரசுக் கட்சியினர் இன்ன இடத்தில் கையெழுத்திடு என்று சொல்ல அந்த இடத்தில் கையெழுத்திட்டவர்கள் யூ. என். பி.யினர். இனவெறி பிடித்து அலைந்த யூ. என். பி. யானையை அடக்கியது தமிழரசுக் கட்சி! ''ஆகையினுல் நீங்கள் தமிழரசுக் கட்சியினரையே மீண்டும் தெரிவு செய்யுங்கள்''.

இவ்வாறு திரு. க. ஜெயக்கொடி அவர்கள் மந்திகையில் 18-4-70ல் நடைபெற்ற கூட்டத்தில் கூறினுர். இக் கூட்டத்திற்கு திரு. ஐயாத்துரை ஓய்வுபெற்ற ஆசிரியர் தலைமை வகித்தார். இறுதியில் தமிழன் கதை, நாடகமும் வில்லுப் பாட்டும் நடைபெற்றது. காலையில் பிரமாண்டமான ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தைப்பற்றிய செய்தி சுதந்திரனில் ஏற்கனவே வெளிவந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

---

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 2-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.